## R 5355 (page 355)

# அடிமைகளின் இனம்

## A RACE OF SLAVES

"நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டு மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்." - ரோமர் 7:14

நாம் பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டோம் என்ற அப்போஸ்தலரின் கூற்றுப்படி நாம் அடிமைகளின் இனமாக இருக்கிறோம். மனுக்குலம் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கிறது என்று வேறு இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ரோமர் 6:16, 17) நாம் எப்பொழுது அடிமைகளானோம் மற்றும் இந்த நிலைமை எப்பொழுது வந்தது என்று நாம் காண பின்னுக்கு பார்க்கிறோம். ஆதாம் தன்னை விற்றுவிட்டார், அதனிமித்தம் அவரது இனம் முழுவதையும் விற்றுவிட்டார். வாங்கினவர் என்ன விலை கொடுத்தார் ? ஆதாம் தன்னையும் தனது சந்ததியினரையும் பாவத்துக்கு கீழாக விற்ற போது ஆதாமுக்கு என்ன கிடைத்தது? அவர் தமது சுய விருப்பத்தை பெற்றார் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அவரது கீழ்ப்படியாமையின் கொஞ்ச காலம் தமது மனைவியின் ஐக்கியத்தை தெரிவு செய்து, இப்படியாக தேவனையும் அவரது சித்தம் மற்றும் அவரது பிரமாணத்தையும் நிராகரித்தார். இந்த விலைக்காக, சுய திருப்திக்காக, இந்த சந்தோஷத்திற்காக தன்னையே பாவத்திற்கு விற்றுப்போட்டு தேவனுடைய பிள்ளையாக இருப்பதிலிருந்து துண்டிக்கப்பட்டார். பிறகு அவர் பாவத்திற்கு அடிமையாகி, அதன் பலனாக மரணத்திற்கு அடிமையானார். (ரோமர் 5:12)

உலகத்தை ஆளுகின்ற ஏகாதிபதியாகிய பாவம் முழு மனுக்குலத்தையும் அடிமைப்படுத்தியிருக்கிறது. இந்த அடிமைத்தனத்திலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. பாவத்தின் இந்த அடிமைத்தனத்தின் கீழ் அவர்கள் வியாதி, துக்கம், ஏமாற்றம் மற்றும் மரணத்தை பெறுகிறார்கள். இந்த மகா சாம்ராஜ்யத்தில் மரணமே மிகவும் உச்சக்கட்டமாக இருக்கிறது. "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று நாம் வாசிக்கிறோம். "சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது." (ரோமர் 6:23; 8:22) அவர்கள் அனைவரும் இந்த அடிமைத்தனத்தில் பயணிக்கிறார்கள். இது இஸ்ரயேலர்கள் எகிப்தில் பார்வோனின் கீழ் பெற்ற அடக்கு முறையினால் சித்தரித்துக் காட்டப்பட்டது. சர்வ உலகமும் தேவனிடமிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டு, அவரது தயவு மற்றும் நித்திய ஜீவனிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறது.

அடிமைகளை திரும்ப வாங்குவதற்காக ஒரு மீட்கும் பொருளை கொடுப்பார் என்பதே தேவனுடைய வாக்குத்தத்தமாக இருந்தது. மீட்பரைக் கொடுத்து இதை ஏற்ற காலத்தில் செய்தார். தகப்பனாகிய ஆதாம் தனது சொந்த மீறுதலினாலே அடிமைத்தனத்திற்குள் சென்றார். அவரது பிள்ளைகளாகிய சகல மனுக்குலமும் அடிமைகளாக பிறந்து, மரண தண்டனைக்கு கீழாக பாவத்திலும், அடிமைத்தனத்திலும் பிறந்தார்கள். கிறிஸ்து தகப்பனாகிய ஆதாமின் ஜீவனுக்காக தமது ஜீவனை, ஒரு சரியான விலைக்கிரயத்தை, ஒரு மீட்கும் பொருளின் விலையை கொடுக்க பாவம் செய்தவர்களை மீட்கும்படி தோன்றினார். சகல இந்த அடிமைகளும் பிறகு விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் விரும்பினால் முழுமையான விடுதலையை அடையலாம். குமாரன் யாரை விடுதலையாக்குகிறாரோ அவர்கள் அனைவரும் உண்மையில் விடுதலையாவார்கள்.

## மனிதனின் விடுதலை நிழலில் சித்தரிக்கப்பட்டது

பாவம் மற்றும் மரணத்திலிருந்து அடிமைகளின் இந்த விடுதலை நியாயப்பிரமாணத்தில் ஐம்பதாவது வருட யூபிலியின் விடுதலையின் மூலம் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டது. யூபிலி வந்த போது அடிமைத்தனத்தை விட்டு விடுதலை அடைய

**R5356 : page 355**

விரும்பாதவர்கள் மட்டும் தான் அடிமைகளாக இருக்கலாம். (உபாகமம் 15:12-17; லேவியராகமம் 25:39-41) கிறிஸ்துவின் ஆளுகையின் ஆயிர வருடம் யுகம் தான் மகா யூபிலியாக இருக்கும். அதில் சகல அடிமைகளும் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் சாத்தானின் அதிகாரத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, அவர்கள் விரும்பினால் சுதந்திரத்துக்கு உயர்த்தப்படுவார்கள். சட்டப்படி அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவது ஒரு காரியம். அவர்களது சலுகைகளை திரும்பப்பெறுவது இன்னொரு காரியம். மனுக்குலம் நீதியின்படி விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் அனைவரும் ஒரு விலைக் கொடுத்து வாங்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் பாவத்தின் அதிகாரத்திலிருந்து எடுக்கப்பட்டு மகிமையின் மகா ராஜாவாகிய இயேசு கிறிஸ்து என்னும் புதிய ஆண்டவரின் கீழ்வைக்கப்படுவார்கள்.

மேசியாவின் ஆளுகை மனுக்குலம் உயர்த்தப்படக் கூடிய ஒன்றாக இருக்கும். இழந்து போனவைகள் அனைத்தும் ஆயிர வருடத்தில் மீட்கப்படும். அடிமைத் தனத்தை விரும்புகிறவர்களைத் தவிர மற்ற அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். அடிமைத் தனத்தை விரும்புகிறவர்கள் இரண்டாம் மரணத்துக்குப் போவார்கள். அவர் மறுபடியும் உயிர்தெழுந்து நித்திய ஜீவனை அடைய முடியாது அல்லது தேவனுடைய குடும்பத்தில் இருக்க முடியாது.

## மனுக்குலத்தின் தற்கால எஜமான்

பாவம் நமது இனத்தின் சொந்தமாகிவிட்டது. நாம் அதன் கட்டுப்பாட்டில் வந்துவிட்டோம். பாவமானது மனுக்குலத்தை தொடர்ந்து ஆட்சி செய்யக்கூடிய ஒரு பெரிய சக்கரவர்த்தியாக உருவகமாக சொல்லப்படுகிறது. பாவத்திற்கு சாத்தான் என்பது மற்றொரு பெயர். நமது கர்த்தர் அவனை, பொய்க்கு பிதாவாயிருக்கிறான் என்றும் "ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகன்" என்றும் கூறுவது போல அவன் பாவத்திற்கும் சகல அநீதிக்கும் பிரதிநிதியாக மிகவும் சரியாக நிற்கிறான். (யோவான் 8:44)

மனுக்குலமானது ஏற்றக்காலத்தில் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும்படியாக இயேசு கிறிஸ்து எல்லாருக்காகவும் மீட்கும் பொருளைக் கொடுத்தார். ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட தெய்வீக தண்டனை மரண மாகும். பாவமே அதற்கு வழியாக இருந்து அதனிமித்தமே இந்த தண்டனை வந்தது. கிறிஸ்து "நமக்காக பாவமாக்கப்பட்டார்." (2 கொரிந்தியர் 5:21) அதாவது அவர் பாவியாக கருதப்பட்டு, பாவி பெற வேண்டிய தண்டனையை அவர் பெற்றுக் கொண்டார். நாம் இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படும்படியாக அவர் அப்படிச் செய்தார். முடிவாக சகல சிருஷ்டிகளும் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாக ஆவார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறார். (ரோமர் 8:20,21)

ஆதாம் சுய திருப்திக்கு ஆளாக்கப்பட்ட போது, இந்த மரண தண்டனைக்கு கீழானார். இந்த தண்டனையை கொடுத்தவர் தேவன். தேவனுடைய தண்டனை சந்திக்கப்பட வேண்டும். ஆதாமின் மேல் வந்த இந்த தண்டனை சந்திப்பதற்கு கிறிஸ்து தமது சகல சுய திருப்தியையும் கைவிட்டு, பிதாவானவரின் சித்தத்தை செய்ய மரிக்க

வேண்டியிருந்தது. "புத்தகத்தில் எழுதியிருக்கிற" தேவனுடைய எல்லா சித்தத்திற்கும் தம்மை சந்தோஷமாக ஒப்புக்கொடுத்தார்.

தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கிற நாம் கிறிஸ்து மூலம்

**R5356 : page 356**

வந்திருக்கிறோம். தன்னிச்சையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியர்களாகி இன்னும் அடிமைத் தனத்துள்ளாகத்தான் இருக்கிறோம். ஆனால் இது பாவத்துக்குள்ளான அடிமைத்தனம் அல்ல, கிறிஸ்துவுக்குள்ளான அடிமைத்தனம் ஆகும். உலகமோ கிறிஸ்துவுக்கு அடிமைகளாயிராமல் பாவத்துக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். கிறிஸ்துவினால் நாம் பாவத்திலிருந்து விடுபட, நாம் நமது சித்தத்தை முற்றிலுமாக அவரிடம் விட்டுவிட வேண்டும் என்று பிதாவானவர் விரும்புகிறார். இது முழுமையான அர்த்தத்தில் நம்மை அடிமையாக்குகிறது. சித்தத்தை முழுமையாக ஒப்புக்கொடுப்பதே மிகவும் முழுமையான அடிமைத்தனம். நமது அடிமைத்தனம் அப்படிப்பட்டது. ஆனால் அது பிரயோஜனமுள்ள ஒன்றாக இருக்கிறது. நாம் புசித்தாலும் அல்லது குடித்தாலும் அல்லது உறங்கினலும் அல்லது வேலை செய்தாலும் நாம் என்ன செய்தாலும் கர்த்தருடைய சித்தத்திற்கு இணக்கமாகவும் அவரது மகிமைக்காகவும் செய்ய வேண்டும். ஆம், நம்முடையது மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட அடிமைத்தனம். எந்த ஒரு சலுகையினாலும் நாம் அதிலிருந்து விடுதலையடைய மாட்டோம்.

நாம் நமது சித்தத்தை முழுமையாக தேவனிடம் அர்ப்பணம் செய்யாமல், நமது இரட்சகரோடு அவரது கனம், மகிமை மற்றும் சாகாமையில் உடன் சுதந்தரராக இருப்பதற்கு, வரக்கூடிய மகிமையான காரியங்களுக்கு நாம் தயார்படுத்தப்படக்கூடியவர்களாக இருக்க மாட்டோம் என்பதை நாம் காண்கிறோம். ஆகையால் கிறிஸ்துவுக்கு கொத்தடிமை ஊழியர்களாவதற்கு பாவத்தின் ஊழியத்திலிருந்து விடுவிக்கப்பட்டோம். பாவத்திலிருந்து விடுதலையாவதை நாம் உணர்வதினால், நாம் மெய்யாகவே விடுதலையாகிறோம். (யோவான் 8:36)

நாம் ஜீவிக்கும் வரையில் நமது சரீரத்தில் இன்னும் கொஞ்ச அளவுக்கு பாவத்திற்கு அடிமையாயிருக்கிறோம் என்பது உண்மை. "சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" என்று வலியுறுத்துகிறார். உங்களை பாவம் ஆதிக்கம் செலுத்த அனுமதியாதீர்கள். பாவத்திற்கு கீழ்ப்படிய மறுத்து விடுங்கள். (ரோமர் 6:12) ஆகையால் நாமே முயற்சிக்க வேண்டும். முயற்சிக்காதவர்கள் பாவத்தின் கொத்தடிமையாக இருப்பார்கள். பழைய எஜமானனை, பாவத்தின் முயற்சிகள் நம்மை மறுபடியும் அடிமைத்தனத்திற்குள் கொண்டு வருவதை நாம் விடாப்பிடியாக உறுதியுடன் எதிர்க்க வேண்டும். கிறிஸ்து நம்மை விடுதலையாக்கின சுதந்திரத்தை பராமரிக்க நாம் முயற்சிக்க வேண்டும். (கலாத்தியர் 5:1) இந்த காரியத்தில் நாம் அரை மனதுடன் இருந்தால். நாம் ஓரளவுக்கே உண்மையுள்ளவர்களாயிருந்து பரிசை ஜெயங்கொள்வதிலிருந்து நாம் தோல்வியடைவோம். நாம் எழும்ப வேண்டும். நாம் முழுவதும் உண்மையுள்ளவகளாயிருந்தால் அவரது கிருபை நமக்கு போதுமானதாக இருக்கிறது. இந்த விசுவாசம் நமக்கு எந்த அளவுக்கு சுயத்தை வெறுத்தலையும் பலியையும் கொண்டு வருகிறதோ அதைக் காட்டிலும் அதிகமாக அவர் நமக்கு ஈடுகட்டுவார்.

### "உலகத்தின் பாவம்"

ஆதாமின் பாவமே உலகத்தின் பாவமாக இருந்தது. ஆதி பாவம் கீழ்ப்படியாமையாக இருந்தது. இந்த கீழ்ப்படியாமை பாவமானது உலகத்தை உடைமையாக்கிக் கொண்ட செயலை மட்டும் உள்ளடக்காமல் அதிலிருந்து

உடைமையை பற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் தண்டனைக்குள் சகலத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. ஆகையால் "உலகத்தின் பாவத்தை" சுமந்து தீர்க்க இயேசு உலகத்தில் வந்தார். (யோவான் 1:29) அவர் தமது ஜீவனைக் கொடுத்து, ஆதாமுக்காக சரிசமமான விலைக்கிரயமாக தமது ஜீவனைக் கொடுத்து. பாவத்திலிருந்து விடுதலையை சாத்தியமாக்கினார்.

ஆதாம் பாவம் செய்த அந்த கனத்திலிருந்து பாவம் ஆதாமை உடைமையாக்கிக் கொண்டது. அவர் பாவத்திற்கு கீழ்ப்படிந்தவுடனேயே அவர் பாவத்தின் அடிமையானார். இங்கே நீதி மற்றும் பாவம் என்கிற இரண்டு கொள்கைகள் காண்பிக்கப்படுகிறது. பாவமானது தூண்டுதல் செய்து கூறியதாவது: இந்த மார்க்கத்தை கடைபிடி; இந்த யோசனைக்கு ஆதாம் இணங்கியவுடன் அவர் பாவத்தின் அடிமையானார். தேவன் தண்டனையை கொடுத்தார். ஆதாம் தன்னிச்சையாக பவாத்தின் ஊழியனான போது தேவன் ஒன்றும் செய்யவில்லை என்று வேதம் குறிப்பிடுகிறது.

## நன்மை மற்றும் தீமையின் கொள்கைகள் நித்தியமானவகைள்

நன்மை மற்றும் தீமையின் மாபெரும் கொள்கைகள், அவைகள் செயல்பாட்டில் இருந்தாலும் இல்லாதிருந்தாலும் அவைகள் இருக்கவே செய்கின்றன. நீதியானது எப்பொழுதுமே இருக்கிறது. எப்பொழுதுமே நீதியின் கொள்கையும் இருக்கிறது, அநீதியின் கொள்கையும் இருக்கிறது. தேவ சாயலில் ஜீவிகள் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்தே தீய மார்க்கம் எப்பொழுதும் திறந்தே இருக்கிறது. சாத்தான் தான் செய்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தவறான மார்க்கத்தை எடுத்திருப்பான். மனுக்குலமானது, அவர்கள் தேர்ந்தெடுக்க விரும்பினால் பாவம் செய்யக்கூடிய சலுகை எப்பொழுதும் திறந்தே இருக்கும். ஆனால் பாவத்தின் சம்பளம் என்ன என்பதை தேவன் முழுமையாக போதிப்பார். மனுக்குலமும் சகல அறிவுள்ள ஜீவிகளும் அந்த பாடத்தை முழுமையாக கற்றுக்கொள்ளுவார்கள். அவர்கள் தவறான மார்க்கத்தை எடுக்கவோ, அதை நேசிக்கவோ மாட்டார்கள். அது தற்கொலையாக இருக்கும் என்பதை அறிவார்கள். எப்படி தேவன் தவறானதை தேர்ந்தெடுக்க மாட்டாரோ அது போல அவர்கள் தவறானதை தேர்ந்தெடுக்கமாட்டார்கள். அனைவரும் "நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கவும்" கற்றுக்கொண்டிருப்பார்கள்.

ஆனால் இந்த இரு கொள்கைகளும் தொடர்ந்து இருக்கும். ஒன்றை செய்வது சரியாக இருந்தால், மற்றதை செய்வது தவறாக இருக்கும். தேவனுடைய நீதியான ஏற்பாடு என்னவென்றால் நீதியின் கொள்கைகளுக்கு கீழ்ப்படிகிற அனைவரும் நித்தியமாக ஜீவிப்பார்கள். ஒருவன் நீதியின் மார்க்கத்தை விட்டு அலைந்தால், நீதியானது அவனை தண்டிக்கும். பாவத்தின் உறுதியான விளைவுகள் பாவியின்மேல் விழும். இது ஒரு பரந்த கொள்கை. "பாவத்தின் சம்பளம் மரணம்," நீதியின் சம்பளம் நித்திய ஜீவன். கண்டிப்புடன் சொல்லுவோமானால் நித்திய ஜீவன் ஒரு கிருபை வரம். அதை யாரும் சம்பாதிக்க முடியாது. "தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்."

## விற்கும் விலையும் வாங்கும் விலையும்

ஆதாம் பாவம் செய்த போது, தனது ஜீவனை விற்றார். ஆதாம் இந்த பாவத்தை செய்தது அறியாமல் அல்ல என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். அவர் பாவம் செய்தால் அதற்கான தண்டனை மரணம் என்பதை அவர் அறிவார். ஆகையால் அவர்

விலக்கப்பட்ட கனியை புசித்த போது, அவரது ஜீவனை விற்கிறார் என்பதை அறிந்திருந்தார். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் ஒரு ஆப்பிளுக்காக தனது ஜீவனைக் கொடுத்தார். இன்னும் சொல்லப்போனால் ஸ்தீரிக்காக அவர் ஆப்பிளை புசித்தார். ஆகையால் தனது சுயதிருப்திக்காக தனது ஜீவனை விலையாகக் கொடுத்தார். ஆப்பிளை புசித்ததின் பலனாக வேண்டுமென்றே மரண தண்டனைக்கு கீழாக, பாவத்தின் அடிமைத்தனத்துக்குள் வந்தார். ஏனெனில் தண்டனையை அவர் அறிவார். ஒரு ஆப்பிளுக்காக தனது ஜீவனை விலையாகக் கொடுத்தார் என்று நாம் பார்க்கிறோம். வாங்கும் விலை, சரிசமான விலை, மானிட ஜீவனைக் கொடுப்பது ஆகும்.

தெய்வீக திட்டம் என்பது பல்வேறு கோணங்களில் பார்க்கிற ஒரு பெரிய கட்டடத்தைப் போல இருக்கிறது. வாங்குவதை மற்றும் விற்பதைக்காட்டிலும் பல்வேறு படங்களை நாம் எடுக்கலாம். ஆனால் இந்த விளக்கம் நமது சிந்தைக்கு மிகவும் பொருந்துகிறது.

மீட்கும் பொருள்தான் இந்த திட்டத்திற்கு அடிப்படை, வேதாகமத்தில் தெய்வீக திட்டத்தின் வேறு எந்த அம்சமும் மிகவும் சரியாக வைக்கப்படவில்லை. மீட்கும் பொருளைத் தவிர வேறு எந்த அம்சமும் வெளிப்படையாகவோ அல்லது நுணுக்கமாகவோ எதிராக போராடவில்லை. ஆதாமுக்கான மீட்கும் பொருளின் விலைக்கிரயம் நீதியிடம் கொடுக்கப்பட வேண்டும். மனுக்குலமானது மரண தண்டனைக்குட்பட வேண்டும் என்று கூறுகிறது. இயேசுவே இந்த கோரிக்கையை சந்தித்தார். நீதியானது, விலைக்கிரயத்தைக் கொடு, மனுக்குலத்தை விடுதலை செய்கிறேன் என்று கூறுகிறது. நீதியின் கைகள் எப்பொழுதுமே நிறைவாய் இருக்க வேண்டும். அதன் பிடியிலிருந்து போகவே கூடாது. விலைக்கிரயம் கொடுக்கப்படும் வரை தண்டனையானது நிற்கும்.

பாவம் என்பது ஒரு ஆளல்ல. அது ஆளுமைப்படுத்தப்பட்ட ஒரு தீய கொள்கை மட்டுமே. அது சில சமயம் ஒரு நபராக இருக்கும். சாத்தானுக்கு ஒப்பாக பயன்படுத்தப்படுகிறது. மனிதன் தன்னையே பாவத்துக்கு விற்றான். நீதியானது அவனை விற்கவில்லை. நீதியானது இந்த பரிவர்த்தனையை, விற்பனையை அங்கீகரித்தது. இதன் முலம் தண்டனையின் கீழ் பாவமானது மனிதனின் மேல் ஆளுகையை பெற்றது. ஆனால் தெய்வீக அன்பு உள்ளே நுழைந்து பாவிக்கான விலைக்கிரயத்தைக் கொடுத்தது. பாவத்திற்கு கீழாக விற்கப்பட்டவர்கள் எல்லாம் மீட்கப்படுவார்கள் அல்லது பாவம் மற்றும் மரணத்திடமிருந்து திரும்ப வாங்கப்படுவார்கள் இந்த பரிமாற்றம் கிறிஸ்து மூலம் மட்டுமே செய்யப்பட முடியும். அவர் வாங்குகிறவரும் மத்தியஸ்தருமாய் இருக்கிறார். அவர் ஏற்ற காலத்தில், அனைவரையும் பாவம் மற்றும் மரணத்தின் தண்டனையிலிருந்து உயர்த்தி, நீதி மற்றும் ஜீவனின் ராஜ்யத்தில் அவர்களை வைப்பார். இயேசு தமது பலியின் புண்ணியத்தின் மூலம் மனுக்குலத்திற்கு ஜீவனை திரும்பியளிக்கும் சலுகையை அளிக்க நீதியானது நின்று உடன்படும்.

--------------------